# DIOCESAN CIRCULAR LETTERS

No.C.03/2024 28.02.2024

## மார்ச் 8 - உலகப் பெண்கள் நாள் 2024

### ஆயரின் சுற்று மடல்

**அன்பிற்கினிய சகோதரிகளே ! சகோதரர்களே !**

இறையாட்சிப் பணியில் பெண்களை உடன் உழைப்பாளர்களாக ஏற்றுக்கொண்ட இயேசு கிறிஸ்துவின் அருளும் ஆற்றலும் உங்களோடு இருப்பதாக !

உலகமெங்கும் மார்ச் 8-ம் நாள் உலகப் பெண்கள் நாளாகக் கொண்டாடப்படுகிறது. இக்காலத்தில் சாதனைப் பெண்களாகச் சிலரே சமுதாயத்திலும் திருஅவையிலும் நம் கண்களுக்குத் தட்டுப்படுகிறார்கள். திறமையால் மட்டும் வெற்றிப் பயணத்தில் பெண்கள் செல்லவில்லை. கல்வியினாலும் கடின உழைப்பினாலும் அதீத ஞானத்தைப் பயன்படுத்தியும் அவர்கள் உலகில் உயர்ந்த நிலையில் நிற்கிறார்கள். சமூகச் சிறைகள், சமுதாயச் சிறைகள், உறவுச் சிறைகள் போன்றவற்றைத் தகர்க்க வாழ்க்கை என்னும் படகில் நம்பிக்கை என்னும் துடுப்பை வைத்து வெற்றி என்னும் கடலைக் கடக்கப் பெண்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில் தமிழக ஆயர் பேரவையின் பெண்கள் பணிக் குழுவானது இந்நாளை "**நம்பிக்கையின் தேடலில் சிறைகளுக்கு விடுதலை**" என்ற மையச் சிந்தனையில் சிந்திக்க நம்மை அழைக்கின்றது.

## மறைமாவட்ட பெண்கள் பணிக்குழு

நமது மறைமாவட்டத்தில் பெண்களின் பங்கேற்பையும் தலைமைத் துவத்தையும் அதிகரிப்பதற்காகவும் உறுதிப்படுத்துவதற்காகவும் பெண்களை ஒருங்கிணைத்து சமூகம், பொருளாதாரம், அரசியல், கலாச்சாரம், சமயம் சார்ந்த அமைப்புகளில் விழிப்புணர்வு வழங்கி நிறை மாண்புடன் சமத்துவ சமுதாயம் உருவாக்கும் இறையாட்சிப் பணிக்காக 1989-ஆம் ஆண்டு அன்றைய மேதகு ஆயர் லியோன் அ. தர்மராஜ் மறைமாவட்டப் பெண்கள் பணிக்குழுவை உருவாக்கினார்.

மனிதம் மறைந்து மனித மதிப்பீடுகள் குன்றிப் போன இன்றையச் சூழலில் பெண்களின் தலைமைத்துவம் கட்டாயத் தேவையாகிறது. தலைமைத்துவப் பண்பை வளர்க்கவும் அரசியல் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்யவும் பெண்கள் ஆற்றல் பெறும் வண்ணம் அதற்குரிய பயிற்சிகள் கொடுக்க வேண்டியதும் தேவைப்படுகிறது.

இதனை மறைமாவட்ட பெண்கள் பணிக்குழு கருத்தில் கொண்டு கருத்தாளர் உருவாக்கப் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி போன்ற பயிற்சிகளைத் தொடர் பயிற்சிகளாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இத்தகைய செயல்பாடுகளை ஆர்வமாய் செய்து கொண்டிருக்கும் நம் மறைமாவட்ட பெண்கள் பணிக்குழுவை உளமாரப் பாராட்டுகின்றேன். அதே சமயம் நம் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும் மறைமாவட்ட பெண்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நான் பங்குச் சந்திப்புக்காகச் செல்கின்ற பங்குகள் சிலவற்றில் பெண்கள் பணிக்குழு இன்னும் உருவாக்காமலிருப்பதை வருத்தத்துடன் பதிவு செய்திருக்கிறேன். அதைப் போன்ற பங்குகளில் ஆரம்பிப்பதற்காகப் பெண்கள் பணிக்குழு மிகுந்த கரிசனையோடு பங்குகள்தோறும் குழுக்கள் உருவாக்குவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது என்பது சிறு ஆறுதல் தருகிறது. நம் மறைமாவட்டத்திலுள்ள 130 பங்குகள், கிளைப்பங்குகளில் 42 பங்குகளில் மட்டுமே பெண்கள் பணிக்குழு செயல்பட்டு வருகிறது என்பது மிக வருந்ததக்கச் செய்தியாகும். பெண்கள் பணிக்குழு உருவாக்கப்படாத பங்குகளில் பங்கு அருள்பணியாளரும், அருள்பணிப் பேரவையினரும் தங்கள் பங்குகளில் பெண்கள் பணிக்குழுவினை உருவாக்க ஒத்துழைப்பு தருவது மிகவும் அவசியமாகிறது. இது நம் விருப்பத்தைப் பொறுத்தது அல்ல; பெண்களின் உரிமை என்பதை உணர்வதே முதன்மை ஆகும்.

## பெண்களின் போராட்ட உணர்வு

பெண்கள் இயற்கையிலேயே போராட்டக் குணம் மிக்கவர்கள். பெண்களின் போராட்ட உணர்வை வளர்த்து சமுதாயத்திற்கும் திருஅவைக்கும் தேவையான உரிமைகளை வென்றெடுக்க அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது நமது கடமை. பெண்களின் உரிமைக்கான போராட்டங்களைக் கொச்சைப்படுத்தாமல் அவர்களோடு தோள்கொடுத்து உரிய மதிப்பளித்து நாம் ஊக்கப்படுத்த வேண்டும். பொதுநலன் கருதி பெண்கள் ஏற்பாடுசெய்யும் போராட்டங்களில் பங்கு அருள்பணிப் பேரவையினரும், பங்கு மக்களும் திரளாக இணைந்து போராட்ட ஆற்றலை வீரியபடுத்தினால் மட்டுமே போராட்டம் வெற்றி பெறும்.

## திருத்தூதுக் கழகங்களும் பெண்கள் பணிக்குழுவும்

பெண் உறுப்பினர்களை அதிகமாகக் கொண்ட திருத்தூதுக் கழகங்கள் பல நம் மறைமாவட்டத்தில் உள்ளன. அவற்றின் உறுப்பினர்கள் அன்னை மரியாவை மாதிரியாகக் கொண்டு ஏழைகளுக்கு உதவி செய்தல், நோயாளிகளைச் சந்தித்து ஆறுதல் கூறுதல் போன்ற பிறரன்பு செயல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அவர்களின் நற்பணிகளை நாம் பாராட்டுகிறோம். எனினும், அவர்கள் சமூக மாற்றம்

தொடர்பான செயல்பாடுகளில் அதிக ஆர்வம் கொள்வதில்லை. பெண்கள் இயக்கத்தினர் அன்னை மரியாவின் மாற்றுச் சமுதாய ஈடுபாட்டை முன்னெடுப்பவர்கள். இவ்வகையில் இரு அணியினரும் அன்னை மரியாவை முன்னிருத்திச் செயல்படும் சகோதர அமைப்பினரே. சமூக மாற்ற முன்னெடுப்புப் பணிகள் சற்று கடினமானவை. மரபுச்சார்ந்த செயல்பாடுகளை மட்டும் முன்னெடுப்பவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவை. ஆனால் இரு அமைப்பினரும் சகோதர இயக்கங்களாக இணைந்து செயல்பட்டால் மாற்றுச் சமுதாயம் காண்பது மிகவும் எளிதாகும். ஆகவே, பெண்கள் பணிக்குழுவினர் திருத்தூதுக் கழகங்களோடு இணைந்து அன்னை மரியாவின் சமூக ஈடுபாடு பற்றிய புரிதலையும் அவரது இறையாட்சி உருவாக்கப் பணிகளைப் பற்றிய விழிப்புணர்வையும் பெற வேண்டும்.

## அருள்பணிக்குழுக்களும் பெண்களும்

அரசியல் தளத்தில் பெண்களின் பங்கேற்பு சரிந்து கொண்டே செல்கிறது. உள்ளாட்சி மன்றங்களில் இட ஒதுக்கீட்டின் மூலம் சரிபாதி பெண்கள் பங்கேற்றாலும் அவர்கள் சுதந்திரமாகச் செயல்படாதபடி தடைகள் பல உள்ளன. நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் பெண்களுக்கான 33% இட ஒதுக்கீடு செயல்பாட்டிற்கு வராமல் வெறும் பேச்சளவில் மட்டுமே உள்ளது. திருஅவையின் பங்கேற்பு அமைப்பான பங்கு அருள்பணிப் பேரவையில் சம உரிமையோ முக்கிய பொறுப்புகளோ பெண்களுக்குத் தரப்படுவதில்லை. அன்பியங்கள், திருத்தூதுக்கழகங்கள், இயக்கங்கள் போன்ற பங்கில் செயல்படுகின்ற பங்கேற்பு அமைப்புகளில் நல்ல தலைமைப்பண்புடனும் பொறுப்புணர்வுடனும் பணியாற்றும் பெண்கள் அருள்பணிப் பேரவை நிர்வாகப் பொறுப்புகளில் புறம் தள்ளப்படுவதென்பது ஒரு முரண்நகை. பெண்களை ஆற்றல்படுத்தி சமுதாயத்திலும் திருஅவையிலும் ஈடுபாட்டுடன் பங்கேற்கச் செய்ய வேண்டியதன் அவசியத்தை ஆண்களுக்கும் பயிற்சிகள் மூலம் தெளிவுபடுத்திட பொதுநிலையினர் பணிக்குழுவும் இளைஞர் பணிக்குழுவும் பெண்கள் பணிக்குழுவோடு இணைந்து செயல்படலாம்.

## இன்றைய காலத்தின் அறிகுறிகள்

இன்றைய நம் நாட்டின் சூழலை ஆய்வுக்கு உட்படுத்தினால் தனியார் மயமாக்கம் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், பெண்களுக்குப் பாதுகாப்பின்மை, மதக் கலவரங்கள், மத அரசியல், மத அடிப்படைவாதம் போன்றவை மக்களின் அமைதியான வாழ்வுக்கு ஊறுவிளைவிப்பதாக இருக்கின்றன. நம் நாட்டு மக்களின் பாதுகாப்பு அரணாக இருக்கின்ற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைச் சிதைப்

பதற்கான முயற்சிகள் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். ஒரே நாடு, ஒரே மொழி. ஒரே தேர்வு, ஒரே தேர்தல் என்ற ஒற்றைக் கலாச்சாரத் திணிப்பு நாட்டின் பன்முகத் தன்மையை அழித்து கூட்டாட்சியை வேரறுத்துவிடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

இத்தகையச் சூழலில் நாம் அனைவரும் சாதி, மத, பாலின வேறுபாடுகளைக் களைந்து சமூக நீதி, சமத்துவம், சமயச் சார்பின்மை போன்ற மதிப்பீடுகளை உயர்த்திப் பிடிக்கும் சக்திகளோடு கரம் கோர்த்து இணைந்து செயல்பட வேண்டிய தேவை எழுகிறது. ஆண்கள் பெண்கள் என்னும் பேதம் தவிர்த்து அனைவரும் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். ஆற்றல்களை ஒருங்கிணைத்து மாற்றுச் சமூக உருவாக்கத்தில் ஒருமித்து செயல்படும் போது இயேசு விரும்பிய இறையாட்சி நம் நடுவே சாத்தியமாகும்.

“இனி உங்களிடையே... ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்” (கலா 3:28) என்னும் பவுலடியாரின் வார்த்தைகளை மனம் கொண்டு இயேசுவின் இறையாட்சிப் பணித் தொடர்வோம். தன் திருமகன் பணியில் உடனுழைத்த புனித கன்னி மரியாவின் துணை நம்மோடு இருப்பதாக!

கிறிஸ்துவின் மனநிலையில்
Sd/-
**+ ஆயர் நசரேன் சூசை**